தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லரசு, கருணை உள்ளத்தோடு, மீண்டும் வீராணம் பகுதி மக்களின் எண்ணத்தை நிறைவேற்றுகின்றவகையில், எதிர்காலத்திலாவது படகுக் குழாம் அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 276, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

276—

கால்நடை மருத்துவமனை

***1762—திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி தொகுதி, கோட்டப்பூண்டி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செஞ்சி தொகுதி, கோட்டப்பூண்டி ஊராட்சியிலே ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கோட்டப்பூண்டி ஊராட்சியிலே அரசின் விதிகளுக்குட்பட்டு, 3,000 கால்நடை அலகுக்குமேல் இருப்பதால், அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டப்பூண்டி ஊராட்சியில், கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்னால் கால்நடை மருத்துவமனை இயங்கிவந்தது. அந்த மருத்துவமனைக்கு ஒரு மருத்துவரும் நியமிக்கப்பட்டு கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, மருத்துவர் இல்லாத காரணத்தினால் அந்தக் கால்நடை மருத்துவமனை பழுதடைந்த நிலையில் இன்றும் இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுப்பதன்மூலம், கிட்டத்தட்ட 10 ஊராட்சிகள் பயன்பெறக்கூடியவகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தரப்படும் என்று கூறியதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.

திரு. க. கோபால்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17–4–2013 அன்று நடைபெற்ற கால்நடைத் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போது, தமிழகத்திலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்றவகையிலே, கடந்த இரண்டு நிதியாண்டுகளிலே வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய திட்டங்களில் ஒன்றான, விலையில்லாத ஆடுகள், கறவை மாடுகள் அளிக்கின்ற திட்டத்தைப்பற்றி எடுத்துச்சொல்லி, இந்த நிதியாண்டிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டம் தொடர ரூ.250 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்று மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே தனது பதிலுரையிலே எடுத்துச்சொன்னார்கள்.

ஆனால், ஏழையெளிய மக்கள் பயன்பெறுகின்ற இந்தத் திட்டத்தைப் பற்றி, குறை சொல்கின்றவிதமாக, திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திவரும் கட்சி நாளிதழான முரசொலியிலே இந்தத் திட்டத்திற்கு நிதி எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படுகிறது? இந்தத் திட்டத்திற்கு நிதியொதுக்கீடு

செய்துள்ளீர்களா என்று குறை சொல்லியுள்ளார்கள். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா?

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையிலே கலந்துகொண்டு பேசாமல், வெளியிலே சென்று திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திவரும் முரசொலி நாளேட்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டத்தினை குறை சொல்லி அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு இந்தத் துறைக்கு ஒதுக்கிய அதே தொகையைத்தான் இந்த ஆண்டும் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றும், பயனாளிகள் மேற்கொண்டு பணத்தை கொடுத்து ஆடு, மாடுகளை வாங்குகிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சராக இருந்தவர் இந்தத் திட்டத்தைப் பற்றி படித்துவிட்டு, எப்படிப் பேச வேண்டுமென்று தெரியாமல் மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டத்தைக் குறை சொல்லியிருக்கிறார்கள்.*

மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்தபோதே ஒரு வருடத்திற்கு 12,000 கறவை பசுக்கள்தான் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஒரு கறவைப் பசுவிற்கு ரூ.30,000/–; போக்குவரத்திற்கு ரூ.1,000/–; வண்டி வாடகை ரூ.3,000/–; காப்பீட்டுத் தொகை ரூ.900/– என்று மொத்தம் ரூ.35,000/– ஆகிறதென்று நான் மானியக் கோரிக்கையின்போது தெரிவித்திருந்தேன். இதற்காக ஓர் ஆண்டிற்கு 50 கோடி ரூபாய் செலவாகிறது. அதே தொகையைத்தான் இந்த ஆண்டும் கொடுக்க முடியும். தேர்தல் அறிக்கையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியதுபோல இந்த ஆண்டும் அதே 12,000 பசுக்கள்தான் வழங்கப்படும். எனவே, அதிகமாக நிதி ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை.

அதேபோல, நாங்கள் தேர்ந்தெடுத்த பயனாளிகளையெல்லாம் எங்களுடைய கால்நடை மருத்துவர்கள் சந்தைக்கு அழைத்துச்

2013 ஏப்ரல் 19]

சென்று கறவைப் பசுக்களை வாங்கவிடுகிறார்கள். ஒரு பசுவின் விலை ரூ.28,000/— என்று சொன்னால், ரூ.2,000/—ஐ பயனாளிகளின் கையிலே வழங்கிவிடுகிறோம். ரூ.25,000/— என்று சொன்னால், ரூ.5,000/—ஐ பயனாளிகளின் கையில் வழங்கிவிடுகிறோம் என்று என்னுடைய மானியக் கோரிக்கையிலே சொன்னேன். ரூ.30,000/—க்குக் குறைவாக வாங்கும்போது மீதி பணத்தை அவர்களின் கையில் கொடுத்து விடுகிறோம். கிட்டத்தட்ட இரண்டு வருட காலமாக சிறப்பாக இந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ரூ.30,000/—க்கு மேற்கொண்டு வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அந்த உறுப்பினர் இந்தத் திட்டத்தை குறை சொல்ல முயற்சி செய்திருக்கிறார்; யாரும் குறை சொல்ல முடியாத இந்தத் திட்டத்தை குறை சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 277, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

277—

பேருந்து வசதி

***5424—திரு. செ. பெருமாள்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து ஏற்காடு வழியாக வெள்ளக்கடை, நல்லூர், பெரியேரிக்காடு கிராமங்களுக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் அரசுப் போக்குவரத்துக் கழகம்மூலம் சேலத்திலிருந்து ஏற்காடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு 10 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஏற்காடு, வெள்ளக்கடை வழித்தடத்தில் 4 அரசுப் பேருந்துகள்மூலம் 6 நடைகளும், ஒரு